**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 26 ஆந் திகதியும்,ஹ முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் புத்தளம் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 10,100,000 பெறுமதியான உழவு இயந்திரமொன்று மற்றும் டிபர் வாகனமொன்று இரு தடவைகள் வாகனங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளமை, ரூபா 1,533,495 தொகையான கைத்தவிர்க்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்றின் பெறுமதி மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களை சொத்துக்களிலிருந்து அகற்றாமை மற்றும் ரூபா 69,070 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினம் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையால் அந்த அளவினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 2,000,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 56 – 4650 இலக்கம் கொண்ட கெப் வண்டி சொத்துக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதியானது ரூபா 10,789,698 ஆக இருந்ததுடன், பயன்படுத்தப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 6,763,641 ஆனமையால் ரூபா 4,026,057 ஆன வேறுபாடொன்று நிலவியது. அவ்வாறே உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 26,263,222 ஆக இருந்ததுடன்,

அந்த நிதியத்தின் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் இது ரூபா 30,828,200 ஆக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

பெற வேண்டியதாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,268,976 ஆக இருந்ததுடன், 01 வருட காலத்தினை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,505,039 ஆகும். பல வருடங்களாக அசைவற்று காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 952,980 ஆகும்.

### 1.3.4 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 3,881,500 ஆக இருந்ததுடன், சேவையை விட்டுச்சென்ற, இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற 11 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 46,568 தொகையான கடன் மீதி பல வருடங்களாக அறவிடப்படாதிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 52,978,405 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (2) (அ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டணம் மற்றும் குத்தகை வாடகை ஆகியவற்றை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 முறையற்ற வெளிப்படுத்தல்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 218,265 பெறுமதியான வீதி விளக்கு உபகரண இருப்பானது எழுதுகருவிகள் இருப்பினுள் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,576,410 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 3,401,064 ஆக இருந்தது.

**2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு**

**செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் உரிய விலகல்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | |
| ஆளணி வேதனங்கள் | 76,404 | 42,979 | 33,425 |
| ஏனையவை | 37,302 | 17,678 | 19,624 |
| உப கூட்டுத்தொகை | 113,706 | 60,657 | 53,049 |
| மூலதன செலவினம் | 142,000 | 16,237 | 125,763 |
| **மொத்தம்** | **255,706** | **76,894** | **178,812** |

மீளாய்வாண்டின் ஆளணி வேதனத்திற்காக மதிப்பிடப்பட்டிருந்த பணத்தில் 44 சதவீதம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகையில் 53 சதவீதம் எஞ்சியிருந்தது. மூலதன செலவினங்களுக்காக மதிப்பிடப்பட்டிருந்த தொகையில் 89 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பிரதேச சபை மிகை மதிப்பீடுகளை தயாரித்திருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமான சேகரிப்பிலான செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 8,000 | 1,284 | 3,552 |
| (ஆ) | குத்தகை வாடகை, கடை வடைகை | 13,000 | 7,355 | 6,093 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,500 | 3,954 | 904 |

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வீதவரியும் வரியும், குத்தகை வாடகை மற்றும் கடை வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆகிய அனைத்து வருமானங்களினதும் அறவீட்டில் மந்தமான நிலையொன்று தென்பட்டதுடன், அதற்கு ஒத்ததாக நிலுவை வருமானங்களும் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்களை அறவிடும் செயன்முன்னேற்றம் பின்வருமாறு.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை வருமானம் | நிலுவையிலான அறவீடு | நிலுவைப் பணத்தினை அறவிடுவதிலான செயன் முன்னேற்றம் | வருடத்தினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்திலான அறவீடு | அறவீட்டின் செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | % | ரூபா '000 | ரூபா '000 | % |
| வீதவரியும் வரியும் | 3,235 | 450 | 14 | 1,163 | 421 | 36 |
| ஏக்கர் வரி | 254 | 17 | 07 | 121 | 99 | 82 |
| குத்தகை வாடகை | 4,226 | - | - | 5,772 | 5,772 | 100 |
| கடை வாடகை | 693 | - | - | 802 | 769 | 96 |
| வியாபார அனுமதிப்பத்திரங்கள் | 903 | - | - | 3,953 | 3,953 | 100 |

வீதவரியின் அறவீடு நலிவான நிலையில் உள்ளமையால் ஒவ்வொரு வருடமும் நிலுவை வருமானம் அதிகரித்தல் தொடர்பில் அது தாக்கம் செலுத்தியிருந்தது.

**2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 12,000,000 ஆக இருந்ததுடன், சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை ரூபா 8,752,567 தொகை கிடைத்திருந்தது. ஆண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,000,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததெனினும். சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை மாத்திரம் ரூபா 3,908,518 தொகையான முத்திரைக் கட்டணத்தை மாத்திரம் பிரதேச சபை வருவித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பிரதேச சபைக்கு சொந்தமான RS – 1556 இலக்கம் கொண்ட மோட்டர் கிரேடர் இயந்திரம் வாடகை அடிப்படையில் தனியார் துறையினருக்கும் அரச நிறுவனங்களுக்கும் வழங்கியமையால் 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முறையே ரூபா 253,627 மற்றும் ரூபா 327,644 எனுமாறு ரூபா 581,271 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல்களின் போது குறித்த கடன் மீதிகளை செலுத்த முடியாதென நிறுவனம் மற்றும் சில நபர்களால் உறுதிபடுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த கடிதங்களை தேட முடியாதுள்ளதென தபால் திணைக்களம் உறுதிபடுத்தியிருந்தது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதி 97.4 இன் பிரகாரம் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) வீதவரியின் மதிப்பீடானது ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கும் ஒரு தடவையும் மேற்கொள்ளப்பட வோண்டுமெனினும், ஆதன மதிப்பிட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்படுவதால் சபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த பெருந்தொகையான சுயமாக உருவாகும் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றினால் ஒவ்வொன்றும் ரூபா 11,500 வீதம் 06 பிளாஸ்டிஷெல் நீர்த்தாங்கிகள் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான தகவல்கள் சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த நீர்த்தாங்கிகள் பொருத்தப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தாமையால் ரூபா 69,000 பெறுமதியான நீர்த்தாங்கிகள் முறையற்ற பாவனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 திண்மக் கழிவு முகாமைத்து நிலையங்களை நிர்மாணித்தல்

பிளிசரு தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தை நிரமாணிப்பதற்கு ரூபா 8,400,000 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 2,050,144 தொகை மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சபை ரூபா 2,028,756 தொகையினை நிர்மாணத்திற்கு பொறுப்பான ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தியிருந்தது. செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், சுமார் இரண்டு வருட காலமாக வேலைத்தளமானது திருட்டு, களவு மற்றும் இயற்கை அபாயங்களுக்கு இடமளிக்கும் வகையில் கைவிடப்பட்டிருந்தது. செலவிடப்பட்டிருந்த ரூபா 2,028,756 தொகையான பணம் விளைவற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது இனங்காணப்பட்டது.

தற்போது குப்பைகளை அகற்றுதல் சபைக்கு சொந்தமான காணியொன்றில் திறந்த வெளியில் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இரண்டாம் நிலையிலான 05 வெற்றிடங்கள் நிலவியதுடன், ஆரம்ப நிலையிலான 28 பேரைக் கொண்ட மிகையொன்று காணப்பட்டது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மேலதிகமாக உள்ளூராட்சி புலனாய்வு உத்தியோகத்தர்களாலும் ஆண்டு முழுவதும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்தன.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்துதல்**

வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/மா/செ/05/03 கணக்காய்வு குழு இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒன்று வீதம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஒரு கூட்டத் தடவையேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

ரூபா 467,800 கூட்டுப் பெறுமதியான SF – 9945, SF – 9114 மற்றும் SB – 8201 இலக்கம் கொண்ட மூன்று கையுழவு இயந்திரங்கள் 04 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சில் பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) கணக்கீடு

(இ) வாகனப் பயன்பாடு